காட்டை அழித்து புதுச் சோலை காண்கிறோம்!

காரிருளில் அதைச் செய்கிறோம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்
சென்னை: புரட்டாசி 2உ சனி (18—9—54) | மலர்: 2
வெளியூர்: புரட்டாசி 3உ ஞாயிறு (19—9—54) | இதழ்: 83

காட்டு வாழ்க்கையை மேற்கொள்ளுவதா?

நாட்டிலே நாசம் விளைவிப்பதா?

விவாக ரத்து பற்றி அனந்தசயனம் அபயக்குரல்

சனாதனிகளுக்கு அவர் தரும் ஆதரவு

விவாகரத்து பற்றிய மசோதாவை சனாதனிகள் எதிர்க்கிறார்கள்; மதமும், இந்து தர்மத்தின் பெருமையும் பாழாகிறது என்று கூறி எதிர்ப்போரும், ஆபத்து வருகிறது என்று எச்சரிப்போரும் உள்ளனர்; சிலர், நேரடியாக எதிர்க்க இயலாது, சுற்றி வளைத்து, 'ஏதோ ஒன்று நடந்து நாட்டை நாசமாக்கும்,' என்று பேசி, மறைமுகமாக இந்த மசோதாவை எதிர்க்கிறார்கள்; மக்கள் சபையில் பேசிய அனந்தசயனம் அய்யங்காரின் எதிர்ப்புக் குரலும் இந்த வகையைச் சேர்ந்ததுதான்!

சிவில் (பதிவு) திருமண மசோதா, டெல்லி சட்டசபையில் நிறைவேறியது.

இந்த மசோதாவின் விவாதத்தின் போது, அனந்தசயனம் அய்யங்கார் கூறியதாவது:—

"ஒரு தார மணம் என்று சட்டமியற்றியிருக்கிறோம்; ஆனால், பலதார மணத்திற்கு வழி செய்கிறோம்.

"நான் இன்று விவாகரத்து செய்துகொண்டு, பின்னர், என் கடைசி நாட்களுக்குள் மீண்டும் பதினொரு முறைகள் திருமணம் செய்து கொள்ளலாம். இது பலதார மணத்திற்கு வழி செய்யவில்லையா? நாம் மீண்டும் காட்டு வாழ்க்கையை நோக்கிச் செல்லவில்லையா? இது ஒழுக்கு தவறிய முன்னேற்றம் இல்லையா?

"திருமணம் என்பது மனிதர்களின் அமைப்பு; மிருகங்களிடையே திருமணம் என்பது இல்லை; நாம் மிருகநிலையிலிருந்து மனித நிலைக்கு உயர்ந்தோம்; இப்போது மீண்டும் அங்கேயே செல்வதா?" என்று கருத்துப்பட அவர் பேசினார்.

"நான், இந்த நாட்டில், ஒழுக்கம் வளர வேண்டுமென்று கருதுகிறேன்—ஏன், ஒருவன், தனது சகோதரியைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்கிறீர்கள். இது சங்கடமான போக்கின் பின் ஏற்றிவிடுவது போல் காணப்படுகிறதே என்பதுதான் என் பயம்—நான் இந்த நாட்டிலே, திருமணமாகிப் பிரிந்த ஆண்களும், பெண்களும், பெற்றோர் இல்லாத குழந்தைகளும் ஒரு பெரும் படையினர் போன்று ஆகும் நிலை ஏற்படுமென அஞ்சுகிறேன்.

"திருமணம் செய்துகொள்வதற்குத் தூண்டுகள்; தம்பதிகளின் பிரிவினைக்கும் பல தடைகளை விதியுங்கள் என்பதே எனது குறிக்கோளேயன்றி, இந்த மசோதாவைக் கண்டிப்பது எனது நோக்கமல்ல," என்று அனந்தசயனம் மேலும் கூறினார்.

மாணவிகள் உண்ணாவிரதம்

சில்லா, செப் 16—

இங்குள்ள ஒரு அரசாங்கம் பயிற்சிக் கல்லூரித் தலைவரை வேறு இடத்திற்கு மாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உத்திரவிட்டுள்ளதை எதிர்த்து, அக்கல்லூரியிலுள்ள சுமார் 130 மாணவிகள் இன்று காலையிலிருந்து உண்ணாவிரதமிருக்கின்றனர்.

தி-கொ. துப்பாக்கி பிரயோகம்

விசாரணைக் குழு உறுப்பினர்கள்

திங்களன்று பெயர் அறிவிப்பு

ஐதராபாத், செப் 18—

சென்ற மாதம் 11-ம் தேதியன்று திரு—கொச்சியில் தமிழர்கள் மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றி, 'போலீசார் சட்டது நியாயமே,' என இலாகா பூர்வமான விசாரணையிலிருந்து தெரியவந்தது; எனினும், விரைவில் நீதிபதி மூலம் பகிரங்க விசாரணை நடத்த தாம் முடிவு செய்திருப்பதாக பட்டம் தாணுப்பிள்ளை கூறியிருக்கிறார்.

விசாரணைக் குழுவினரின் பெயர்கள், தாம் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்ததும் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

கம்யூனிஸ்டுகளோ அல்லது வேறு யாரோ தனது மந்திரி சபையின் ஸ்திரத் தன்மையைக் குலைக்க முடியாதென்றும், தான் காங்கிரசில் சேரப்போவதென்பது தவறான செய்தி என்றும் அவர் கூறினார்.

சீனக் கடற்கரையில் கொந்தளிப்பு

யுத்தக் கப்பல்கள் மோதல்

ஹாங்காங், செப். 17—

மக்கள் சீன, 'தேசிய சீன' போர்க் கப்பல்கள் தாசென் தீவிற்கு தெற்கில் 35 மைல் தொலைவில் நேற்று சுமார் 40 நிமிடங்கள் தொடர்ந்து துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டன.

மக்கள் சீன கப்பற்படையினர் ஒரு வர்த்தகக் கப்பலை பாதுகாப்புடன் கொண்டு செல்கையில் அது 'தேசியச் சீன' யுத்தக் கப்பல்கள் தாக்க ஆரம்பித்ததாகவும், உடனே, கம்யூனிஸ்டு சீன கப்பற் படையினர் வர்த்தகக் கப்பலை பத்திரமாக தங்கள் கடற் கரைகளுக்கு அனுப்பிவிட்டு, தாக்குதலை எதிர்த்ததாகவும் கம்யூனிஸ்டு சீன செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் சீன கம்யூனிஸ்டு கட்சியினர் 'இறக்கு சீனாவில் யார்மோசா விடுதலைக்காக 'மக்கள் விடுதலை இராணுவம்' என்று உருவாக வேண்டும்' எனவும், 'எல்லா மக்களும் அந்த விடுதலை இராணுவத்தில் பங்கு பெற தங்களைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும்' என்றும் அறைகூவல் விடுத்துள்ளதாக, நவசீன செய்தி நிறுவனம் தகவல் தெரிவிக்கிறது.

அதே நேரத்தில் தேசியச் சீன செய்திகள் தைவான் மீது படையெடுப்பதற்காக சீனாவின் பிரதானப் பகுதிகளில் ஆயத்தங்கள் நடைபெறுவதை சீன தேசிய விமானப் படையினரும் கப்பல் படையினரும் கண்ணாரக் கண்டதாகத் தெரிவித்திருக்கின்றனர் என்று கூறுகின்றனவாம்.

கஜனபர் அலிகான்

இராஜினாமா செய்வார்?

பம்பாய், செப். 17—

இந்தியாவிலிருக்கும் பாகிஸ்தான் ஹைகமிஷனர் கஜனபர் அலிகான், தமது பதவியை இராஜினாமா செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானின் அரசியல் நடவடிக்கைகளில் மீண்டும் அவர் ஈடுபட உத்தேசித்திருப்பதே இந்த இராஜினாமாவுக்குக் காரணமாயிருக்கலாம்.

டெல்லியிலிருந்து விமான மூலம் நேற்று இங்கு வந்த அவர், இவ்வாறு பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்தார். ஆனால், அவ்விதம் தமது பதவியை எவ்வளவு சீக்கிரத்தில் இராஜினாமா செய்வது என்பதை பற்றி இப்போது சொல்ல இயலாது என்றும் குறிப்பிட்டார்.

சமுதாய சீர்திருத்தம்தான் பொருளாதார சீர்திருத்தத்திற்கு அடிப்படை

தி. மு. க. வெற்றிப்பாதையில் செல்கிறது

நெல்லை மாவட்ட சமுதாய சீர்திருத்த மாநாட்டில் கண்ணதாசன் தலைமையுரை

"கடினமான காரியத்திலே, தொடர்ந்து, தன் உழைப்பைச் செலவிடுகிறவனுக்கும், சித்திர வாசல் திறந்தே வைக்கப்படுகிறது; லட்சோப லட்சம் சுயமரியாதைக்காரர்கள், அந்த வாசலில் நுழைந்துகொண்டிருக்கிறார்கள்!"

"மற்றக் கட்சியினருக்கும், தி. மு. கழகத்திற்கும் உள்ள அடிப்படை பேதம் இதுதான்—அவர்கள், மேலே இருக்கும் புண்ணைப் பரிசோதிக்கிறார்கள்; 'இது சொறியா, சிரங்கா? கண்டமாலையா, வேனல் கட்டியா? அப்படியானால் களிம்பு போடு!' என்கிறார்கள்! களிம்பு போடுகிறார்கள்; புண் ஆறிவிடுகிறது; சில நாட்களில் மீண்டும் வருகிறது! ஆனால், தி. மு. கழகம், இரத்தத்தையே பரிசோதிக்கிறது—'இரத்தம் கெட்டுவிட்டது; அதனால் தான் புண் வருகிறது; இரத்தத்தை சுத்தம் செய்,'—என்கிறது; அதுதான் சமுதாய சீர்திருத்தம்!"

'சமுதாய சீர்திருத்தந்தான், பொருளாதார சீர்திருத்தத்திற்கு அடிப்படை; அது இல்லையேல், இது நடவாது—நடந்தாலும் நிலைக்காது!"

"தி. மு கழகம், உடற்கூற்று நிபுணன் போன்றது; மனோதத்துவ அறிஞன் போன்றது; அதனால்தான் மற்ற நாட்டு சீர்திருத்தவாதிகள் கொல்லப்பட்ட இடத்திலே, தன் கொள்கையை ஆரம்பித்துக்கொண்டு வளர்கிறது; வளர்கிறது—வெற்றிப் பாதையில் வளர்ந்துகொண்டு போகிறது!"

—இவ்வாறு, 18—9—54 சனிக்கிழமையன்று, பாளையங்கோட்டையில் நடைபெற்ற சமுதாய சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் கண்ணதாசன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"வீரர்கள் உலவிய பகுதி; விவேகிகள் நிறைந்த பூமி—பாளையங்கோட்டை! இங்கே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமுதாய சீர்திருத்த மாநாடு நடைபெறுகிறது!

குன்றுக்குடியோ, அடர்ந்த காட்டை அழிக்கும் வேலை 'சீர்திருத்தம்' என்பது.

காட்டை அழித்து, புதுச் சோலை காண்பது சாமானிய வேலை அல்ல; அதிலும், காரிருளில் அதைச் செய்ய வேண்டும்! கால் வைத்த உடனே பாதம் முழுவதும் பற்றிக் கொள்ளும் நெருஞ்சி முட்கள்—அவற்றைப் பட... ...களைந்து ... ...களைந்தெறிந்து பாய்ந்து ...கள் — அவற்றை நேராக எதிர்த்தும் போராட வேண்டும்; ஒன்று, இரண்டா? இந்த வேலை, சிம்பிளாகச் செய்யக்கூடிய வேலை அல்ல—மிகப் பெருங்காரியம்; ஆனாலும், அதைத் தோளிலே தூக்கிப் போட்டுக்கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

காலையிலே, கண் விழிக்கும் போதே, 'நல்ல முகத்தில் விழிக்க வேண்டும்; இல்லையேல், அன்று முழுவதும் கெட்டுவிடும்!' என்று கருதுகிற பண்பிலே இருந்து, 'இரவு படுக்கப் போகும் போது பாயும் தும்மக் கூடாது; தமிழில் பேசுதல்' என்று, என்னுகிற பண்புவரையில் திராவிட சமுதாயம் ... ...மைப் ... ...க்கிறது; இதை நீர் வார்த்து வளர்க்க ஒரு தனிக் கூட்டம்! இந்த அத்தனையையும் அழித்து, அறிவை வளர்ப்பது, கையிலே ஆட்சி உள்ளவர்களுக்குக்கூட சுலபமான வேலை அல்ல! ஆனாலும், அதைத் தன் கடமையாக நினைத்து, கையிலே எடுத்துக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

"என்னை இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி கேட்ட நண்பர்கள், நான் பெரிய சீர்திருத்தச் சிங்கம் என்று கருதிக் கேட்டார்கள் என்று நான் நினைக்கவில்லை;

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—9—54 சனி

ஆதரவு கிடைக்கும்!

"நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி சுரங்க வேலையை இலாபகரமான முறையில் செய்தாக வேண்டியிருக்கிறது; இது சென்னை சர்க்காரினுலேயே செய்யப்பட வேண்டுமா அல்லது தனிப்பட்ட கார்ப்பரேஷன் ஒன்றினுல் செய்யப்பட வேண்டுமா என்பது இன்னும் ஆலோசனையில் இருக்கிறது; இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தகுதி வாய்ந்தது நமது மின்சார இலாகா என்பதும், நெய்வேலியில் இந்த மின்சாரத் திட்டத்தை அமைக்கும் வேலையையும் அவர்களிடம் விட்டு விட வேண்டுமென்பதும், என்னுடைய சொந்த அபிப்பிராயம்,"

என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சர்க்காரின் மின்சார அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைப் பற்றி சென்னை மின்சார இலாகா நிர்வாக சார்ட்டினெட் அதிகாரிகள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தை நல்ல முறையில் இலாபகரமாக நடத்த சென்னை சர்க்கார் அதிகாரிகள் தகுதி படைத்தவர்கள் என் [illegible] நிதி அமைச்சரின் கருத்தும்,

அமைச்சரின் கருத்தை ஆழ்ந்து சிந்தித்தால், இத்திட்டத்தை மத்திய சர்க்காரிடம் விட்டு விட அவர் விரும்பவில்லை என்று கூறலாம். ஏனெனில், மின்சார இலாகா சிப்பந்திகளைப் பாராட்டவும், அவர்களின் திறமையைப் புகழவும் மட்டுமே கூறப்பட்ட கருத்து இது என்று கூறிவிட முடியாது.

அவர்களை மட்டும்பாராட்ட வேண்டுமென்று அமைச்சர் சுப்பிரமணியம் கருதியிருப்பாராளுல், சம்பளத்தை அதிகப்படுத்த முயற்சிக்கிறேன்; பிராவிடெண்ட் நிதிக்கு நல்ல ஏற்பாடு செய்கிறேன்,' என்றோ, அல்லது, 'கடவுள் உங்களுக்கு நல்ல திறமையைக் கொடுத்திருக்கிறார்,' என்பது கோன்றோ கூறியிருக்கலாம்.

நெய்வேலித் திட்டம் மத்திய சர்க்காரின் பிடியில் சிக்கி விடக்கூடாது! என்ற கருத்தைத்தான், அமைச்சர், இப்படி மறைமுகமாகக் கூறியிருக்கக்கூடும்; ஆனால் அமைச்சருக்கு அந்த எண்ணம் இருந்தாலும், அதை வெளிப்படையாகச் சொல்லும் அளவுக்கு மனஉறுதி படைத்த இடத்திலே அவர் இல்லை; அவர் இருக்கிற முகாம், அப்படிப்பட்டது!

நிதி அமைச்சரின் உள்ளத்திலே அதுவோன்று—இத்திட்டம் மத்திய சர்க்காரிடம் சிக்கிவிடக் கூடாது—என்ற எண்ணம் இருக்கிறதோ இல்லையோ, மத்திய சர்க்கார் என்னவோ அந்த எண்ணத்தில்தான் இருக்கிறது.

நாட்டிலே, மண்ணுக்குள் கிழ் காணப்படும் பொருள்கள் எல்லாம் தனக்கே உரித்தானது என்று அரசியல் சட்டத்தில் மத்திய சர்க்கார் உரிமை கொண்டாட வழி செய்திருக்கிறது.

நெய்வேலிச் சுரங்கத்திலே கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாய் லாபத்தை வடநாட்டு முதலாளிகளிடம் சேர்ப்பிக்க இப்போது மத்திய சர்க்கார் ஆட்சிபீடத்தில் இருப்போர், ஆவன செய்ய முயற்சிப்பார்கள் என்பது உறுதியாகும்.

ஆகவே, இப்பிரச்சினையிலே மிகவும் கண்டிப்புடன் இருக்க வேண்டும். நெய்வேலியிலே கிடைப்பது நிலக்கரி மட்டுமல்ல; அத்தொழிலை ஒட்டி அங்கே வளரப்போகும் தொழில்கள், சென்னை சர்க்காரின் ஒரு வருட வருமானத்தையே தரும் அளவுக்குத் தகுதி படைத்தனவாகும்.

சிறந்த முறையில் நெய்வேலி நிலக்கரி பற்றி திட்டமிட்டால், அது லட்சக்கணக்கான திராவிட மக்களுக்கு வேலை தரவும், [illegible] தேவையான பொருள்கள் பலவற்றைத் தயாரிக்கவும், சேலத்திலே கிடைக்கும் இரும்பை உருவாக்கவும் வாய்ப்புக்களைத் தரும்; இப்படி பலதரப்பட்ட தொழில்களை அங்கே நடத்தலாம். மூன்னூறு ஆண்டுகளுக்கு இந்த நாட்டில் நிலக்கரிப் பஞ்சமும் ஏற்படாது.

இவ்வளவு சிறந்த தொழில் வாய்ப்புகள் கொண்ட பிரதேசம் வடநாட்டார் ஆதிக்கத்திலே சென்றுவிடாதபடி சென்னை சர்க்கார் பாதுகாக்க வேண்டும்.

வடநாட்டிலே மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்றன. முன்பெல்லாம் அங்கே அமெரிக்க நிபுணர்கள்தான் உதவிக்கு வந்தார்கள்; இப்போது ரஷ்ய நிபுணர்களையும் அழைத்துத் திட்டமிடுகிறார்கள்; இரும்புத்தொழிற்சாலைக்குத் திட்டமிடவும் ரஷ்ய நிபுணர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய திட்டத்தை பதினெட்டு மாதங்களிலேயே கட்டி முடிக்கப் போகிறார்கள், திட்டமிடும் செலவு, திட்டமிட்டு ஆகும் செலவு, நிபுணர்கள் வந்து போகும் செலவு இவை அனைத்தையும் கடனாகவும், இனாமாகவும் பெறப்போகிறார்கள்.

வடநாடு வளமுள்ள நாடு ஆக, எவைகளைச் செய்ய வேண்டுமோ, எந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமோ அவ்வளவையும் செய்கிறார்கள்

அதே நேரத்தில், சென்னை நிதி அமைச்சர் பேசுகிறார்—இத்திட்டத்தை யார் [illegible] துவது [illegible]

எதிர்க் கட்சியின் எண்ணங்களுக்கு மந்திரி சபை மதிப்பளிக்கவில்லை!

சட்டசபையின் உரிமைகளை சர்க்கார் சரிவர உணரவில்லை!

கண்டிப்போரை பழிவாங்குகின்றனர்!

மத்திய பாரத் ஆட்சியாளர் போக்கு!

காங்கிரஸ் எம். எல். ஏ. கண்டனம்!

இந்தூர், செப். 14—

"மத்திய பாரத் ஆட்சியாளர்கள் எதிர்க் கட்சியினர் கருத்துக்கு மதிப்பளிப்பதில்லை; கண்டனங்களைப் பொறுப்பதில்லை; சட்டசபையின் உரிமைகளைப் புரிந்துகொள்ளவில்லை;

"ஜனநாயகம் தழைத்தோங்குவதற்குள்ள அபிப்பிராயபேதமான விவாதங்களையும், விமர்சனங்களையும் அரசாங்கம் ஒதுக்கித்தள்ளிவிடுகிறது;

"வெறும் ஆரம்பகால ஜனநாயகத்தை மட்டுமே இந்த நாட்டில் அமுல் செய்யப்புகுந்த வெள்ளைக்காரர்கள்கூட, சட்டசபையில் எதிர்க்கட்சியினரின் விமர்சனக் கண்டனங்களுக்கு மதிப்பளித்தனர்; ஆனால், இன்றைய அரசாங்கம், எதிர்க் கட்சியினரின் எண்ணங்களுக்கு மதிப்பே தருவதில்லை."

இவ்வாறு, மத்திய பாரத் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ் எம். எல். ஏ.-வான மாளுர்கார் என்பவர் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டினார்.

மேலும் அவர் சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நாட்டின் ஜனநாயகம் நன்முக அமுல் செய்யப்பட்டு, வேகமாக வளர்ச்சி அடையும் பொருட்டு, அரசாங்கம் விமர்சனக் கண்டனங்களை வரவேற்க வேண்டும். எதிர்க் கட்சியினரும், அதிகார பூர்வமான புள்ளி விவரங்களுடன் கூடிய விமர்சனங்களைத் தருவதில்லை என்பதையும் ஒத்துக்கொண்டு உணருகிறேன்

"சபையின் உரிமைகளைப் பற்றி அவைகளிடத்து சர்க்கார், இன்னும் 'பப்ளிக் சர்வீஸ் கமிஷனின்' நிர்வாக அறிக்கையையும், 1952—53-ம் ஆண்டிற்கான வரவு - செலவுக் கணக்குத் தணிக்கைக் குழுவின் அறிக்கையையும் சபை முன் வியாதத்திற்கு வைக்கவில்லை. இந்த நிலை மிகவும் அவமானமானது. உடனடியாக இந்நிலை மாற்றப்பட வேண்டும்

"விமர்சனம் செய்யும்போது, அரசாங்கத் தரப்பினர் கோபமடைகின்றனர்; கண்டனம் செய்பவர் மீது கோண்டுமென்றே பழிவாங்க முற்படுகின்றனர்.

"சட்டசபைக்கு [illegible] டதான் மந்திரி சபை என்பதை ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் மறந்துவிடக் கூடாது"

டில்லியிடம், சென்னை ரூ. 6 கோடி உதவி கேட்கிறது

நெய்வேலியில் தெர்மல் நிலையம் அமைக்கப்படும்

சென்னை, செப் 16—

அடுத்த இரண்டு ஆண்டுகளில் சென்னை இராஜ்யத்தில் மின்சார வினியோக அபிவிருத்தி வேலை [illegible] முடிவதாகவில்லை—என்று!

வடக்கே நிறைவேறும் திட்டங்களின் சிறப்பை உணர்ந்த தேசிய ஏடு ஒன்று, 'நெய்வேலி நிலக்கரி, சேலத்திலே கிடைக்கும் இரும்பு ஆகியவைகளை வெளியே எடுக்க ரஷ்ய நிபுணர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும்,' என்று கற்புறுத்தியிருக்கிறது.

இவை அனைத்தையும் சென்னை ஆட்சி பீடத்தில் இருப்போர் உணர வேண்டும்.

நெய்வேலி நிலக்கரித் திட்டத்தை சென்னை சர்க்கார் தான் ஏற்று நடத்தும் என்று டில்லிக்குத் திட்டவட்டமாக தெரிவித்துவிட வேண்டும்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தை சென்னை சர்க்கார் ஏற்று நடத்தும் முயற்சியில் ஏற்படும் எதிர்ப்புகளைச் சமாளிக்க மத்திய சர்க்காருடன் மட்டுமல்ல, வேறு எங்கிருந்து எதிர்ப்புகள் கிளம்பிலும், அதனை, சென்னை சர்க்கார் அணியுடன் எதிர்க்கட்சிகளும், திராவிடர்கள் சென்னை சர்க்காரின் [illegible] ஆதரவை [illegible] ஆதரவளிப்பார்கள் என்று [illegible] கூறுகிறோம்,

களைத் துரிதப்படுத்த சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரிடம் சுமார் 6 கோடி ரூபாய் உதவி கோரியிருக்கிறதாம

இச்செய்தியை சென்னை நிதி அமைச்சர் கூறினார்.

குண்டா, வெளியாது அணைத் திட்டங்களோடு நெய்வேலியில் தெர்மல் நிலையம் ஒன்றை அமைப்பதும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கும் என்று அமைச்சர் மேலும் கூறினர்

இப்போது நெய்வேலியில் அமுலாகும் பரிட்சார்த்தத் திட்டம் வெற்றிகரமாகும் என்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலையை லாபகரமான முறையில் செய்தாக வேண்டியிருக்கிறது; இது சென்னை சர்க்காரினுல் செய்யப்பட வேண்டுமோ, அல்லது தனிப்பட்ட கார்ப்பரேஷன் ஒன்றினுல் செய்யப்பட வேண்டுமா என்பது இன்னும் ஆலோசனையில் இருக்கிறது என்றும்; இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தகுதிவாய்ந்தது நமது மின்சார இலாகா என்பதும், நெய்வேலியில் இந்த மின்சாரத் திட்டத்தையும், அமைக்கும் வேலையையும் அவர்களிடம் விட்டுவிட வேண்டுமென்பதும் என்னுடைய சொந்த அபிப்பிராயமாகும்." என்று நிதி அமைச்சர் மேலும் கூறினர்.

இந்தியாவில், 1953-ம் ஆண்டில் மொத்தம் 378 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தியாகியது; 1952-ம் ஆண்டில் உற்பத்தியானது 353 லட்சம் டன்.

காக்கி உடையே அணிய வேண்டுமாம்!

ஜோர்தானில் புதிய முறை!

ஜோர்தானிய மாணவர்களும், ஆசிரியர்களும் பள்ளிக்கூடம் செல்கையில் காக்கி உடைகளையே அணிந்துகொள்ள வேண்டுமாம்.

இந்த உத்திரவு பிறப்பித்துள்ள புதிய கல்வி இலாகா, 'சகோதர சமத்துவத்தை உருவாக்கவும், ராணுவ ஒழுங்கு முறையை உண்டுபண்ணவும், தேவையான இந்த உத்தரவை மீறுபவர்கள் பள்ளியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்றும் கட்டளை பிறப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தப் புதிய முறை மாணவர்களிடையே, ராணுவ நடவடிக்கைகளை வளர்ப்பதுடன் நாட்டின் பொருளாதார, தேசியக் கொள்கைக்கும் உகந்ததாயும், லாபகரமானதாயும் இருக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளதாம்.

சவூதி அரேபியாவிற்கு இந்தியத் தூதுவர்

நட்புறவை வளர்க்கவாம்!

புதுடில்லி, செப். 16—

இந்தியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளிடையே நிலவி வரும் நெருங்கிய நட்புறவை பலப்படுத்தி வளரச் செய்யும் பொருட்டு, சவூதி அரேபியாவில் உள்ள இந்திய 'கான்சலேட் - ஜெனரல்' இந்தியத் தூதுவராக உயர்த்தப்பட வேண்டும் என்று இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக, இந்திய வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் கூறினார். இந்த 'அந்தஸ்து' உயர்வு இவ்வருடம் அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலாகுமாம்.

ஜெட்டா நகரின் இப்போது இந்திய கான்சல்-ஜெனரலாக இருக்கும் எம். கே. கித்வாய் இனி இந்திய தூதவராக உயர்த்தப்பட்டு பதவியேற்பார் என்றும் தெரிய வருகிறது.

தென் ஆப்பிரிக்கக் 'கம்யூனிஸ்டு' பட்டியலில் 46 இந்தியர்கள்

தென் ஆப்பிரிக்காவில் உள்ள சுமார் 46 இந்தியர்கள் கம்யூனிஸ்டுகள் எனப் 'பட்டம்' சூட்டப்பட்டுள்ளனராம்.

'கம்யூனிச ஒழிப்புச் சட்டம்' என்றபெயரில் 1950-ல் அமுலுக்கு வந்த சட்டம் ஒன்றின் பெயரால் சுமார் 518 பேர்கள் இப்படி வெளியிடப்பட்டிருக்கின்றனராம்

212 ஆப்பிரிக்கர்கள், 207 ஐரோப்பியர்கள், 53 கறுப்பு நிறத்தவர் இவர்களும் அதே பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் என்றனும்!

பிரிட்டன் நஷ்டஈடு கோருகிறது

பிரிட்டனின் விமான மொன்று கடந்த ஜூலை 23-ல், ஷாய்னன் தீவுக்கு அருகே சீன ராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டதினுல் பிரிட்டன் இழந்த உயிர்கள், பொருள்கள், விமானம் இவற்றிற்காக 3 67,000 பவுன் நஷ்டஈடு கோரும் கடிதம் ஒன்றை சீன அரசாங்கத்திடம் பிரிட்டிஷ் தூதுவர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

1954—55-ம் நிதி ஆண்டில், முதல் மூன்று மாதங்களில் வருமான வரி மூலம் சுமார் 17 13 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

"மூச்சிங்கள இயக்கம்— நாட்டிலே ஆபத்தை விளைவிக்கும்"

கிராண்ட்பாஸ் தி. மு. கழக ஆண்டு விழாவில் கழகத் தோழர்கள் சொற்பொழிவு

கொழும்பு, செப். 17—

"பிறந்த மகனுக்கும் பிரஜா உரிமை இல்லை என்று, நம் போன்றவர்கள் குற்றங் கூறிக் குரலெழுப்பிக் கொண்டிருக்கின்ற இந்த கோரத்திலே, தென்னாட்டினர் படையெடுப்பினர் என்ற வீணான விபரீதத்தை—ஆபாண்டத்தைக் கிளப்பி, மக்களை வேறு கோணத்தில் திருப்ப, ஒரு நாட்டின் பிரதமரே—கொ[illegible]லாவலை—செய்வது வெறுக்கத்தக்க, ஒதுக்கத் தக்கதோர் காரியம்."

இந்திய நாட்டில் தோன்றிய 'இந்து மகா சபை'யினரையும், 'ஆரிய சமாஜி'களையும், ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தி, கண்ணியத்தை ஏற்படுத்தாமல் வெள்ளையர் விட்டு வைத்த காரணத்தால்தான், அவ்வியக்கத்தினரின் வெறிச் செயல்கள் காலப்போக்கில் வரம்பு மீறி, கடைசியில் 'உலக உத்தமர்' எனப் போற்றப்படும் காந்தியாரின் உயிரையே குடிக்கவும், லட்சாயிர மக்கள் இரத்த வெள்ளத்தில் மிதக்கவுமான கோர நிலை ஏற்பட்டு, உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது!"

"அதுபோன்று, இலங்கையிலும் இப்போது, 'மூச்சிங்கள முன்னணி' போன்ற இயக்கத்தினரின் விபரீதப் போக்கினைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தினர் முன்வரவில்லையானால், இங்கும் அதுபோன்ற விபரீத விளைவுகள் அவ்வியக்கத்தினரால் நிச்சயமாக ஏற்படலாம்."

—என்று, 12—9—54 மாலை கொழும்பு மஞ்சுநாதத்தை அரசினர் மத்திமப் பாடசாலை மண்டபத்தில் அமைந்துள்ள 'கந்தசாமி' அரங்கில், தோழர் கலாபேசன் தலைமையில் நடைபெற்ற இலங்கை தி. மு. கழக கிராண்ட்பாஸ் கிளைக் கழக ஆண்டு விழாக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய டி. எம் பீர்முகம்மது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் காலத்திற்குப் பின், தென்னாட்டவர் யாவரும் கம்யூனிஸ்டுகளாக மாறி இலங்கையைத் தாக்குவர்' என்று கொத்தலாவலை கூறுவது, இந்த நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல், அதை வேறு கோணத்தில் திருப்ப வேண்டும் என்ற அவரது முயற்சியைத் தெளிவுபடுத்திக் காட்டும் அத்தாட்சியே தவிர வேறல்ல; நேரு ஆட்சி முடிந்துவிடும் என்று ஆருடம் பேசுகிற அவர், தாமும் தனது ஆட்சியும், 'சாகாவரம்' பெற்றவை என்று எண்ணிக் கொண்டிருப்பது போலும்! இப்படி அவர் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்வது அரசியல் அசம்பாவிதமாகும்."

இந்த விழாவை, இலங்கை தி. மு. கழக பொறுப்பாளர் தோழர் இரா. அதி. மணி துவக்கி வைத்தார் கிராண்ட்பாஸ் கிளைக் கழகத் துணைச் செயலாளர் தோழர் பெரியண்ணன் வரவேற்புரையாற்றினார். கழகப் பொருளாளர் தோழர் எஸ்.என் மணி வாழ்த்துரை மடல்களையும், ஆண்டறிக்கையையும் படித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் தோழர் எஸ். ஜே வி செல்வநாயகம், க்யூ சி, இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் ச. பொன்னம்பலம் அருணாசலம் உருவப் படம் திறக்கப்பட்டது. பல தோழர்களால், காந்தியார், ஜின்னா, பெரியார் ஈ வெ. ரா ஆகியோரின் படங்களும் திறக்கப்பட்டன. பதுளை 'சமூக முன்னேற்றம்' ஆசிரியர் தோழர் மு வே பெ. சாமி அவர்கள், தி மு கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

'புனிதப் போர்' முடிவடைய வில்லையாம்!

கராச்சி, செப் 17—

போலீஸ் படை அணிவகுப்பு ஒன்றினைப் பார்வையிட்ட 'ஆசாத்' காஷ்மீர் சர்க்கார் அதிபர், ஷேக் அகமது, 'புனிதப் போர்' இன்னும் முடிவடையவில்லை என்றும், போலீஸ் படையினரை 'புனிதப் போர் வீரர்'களாகக் கருத வேண்டுமென்றும் கூறியுள்ளார்!

மண விலக்கு உரிமை— பண்டிதர் வரவேற்கிறார்

"விவாகம் என்பது வெறும் ஆண்-பெண் உறவிற்கு அப்பாற்பட்டதாகும். எல்லா காரியங்களிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து, தோழமை கொண்டவர்களே திருமணமாகும். விவாகத்தில் ஆண்—பெண் சம்மந்தத்தைப்பற்றி நான் குறைத்துப் பேசவில்லை; விவாகம் என்பது ஆண்—பெண் சம்மந்தம் மற்றிமட்டுமே நினைப்பது தவறு; திருமணம் என்பது இதைவிடப் பெரியதோர் காரியம்; அதை வெறும் ஆண்-பெண் இச்சையைக் குறித்ததாக அணுகும் முறையினை நான் கண்டிக்கிறேன்.

"ஆண்-பெண் இருவரும் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் வாழ முடியாது எனக் காணப்படுகிறதானால், இந்த விவாகரத்துக்கான காரணம்; ஆனால், ஆத்திரத்தில் இருவர் வாழ்க்கையையும் பாழ்படுத்தும் தீர்மானத்திற்கு நாம் வரக்கூடாது; நன்கு ஆலோசிக்கவும், ஒத்துழைப்புக்கும், மற்றும் எல்லா வழிகளுக்கும் வேண்டிய அவகாசம் இந்த இந்த திருத்தத்தில் இருப்பதால் இதை நான் வரவேற்கிறேன்,"

—என்று, பண்டித நேரு, விவாக மசோதா பற்றி மக்கள் சபையில் விவாதம் நடந்தபோது கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது!—

"விவாக ரத்துக்கு வழி செய்வதானது விவாக முறையையே தகர்ப்பதாகும் என்று சிலர் கருதுகின்றனர்; ஆனும், 'வேண்டிய அவகாசம் கொடுக்க வேண்டுமென்று' இருக்கிற காரணத்தால், தம்பதிகள் சுகமாகவும், சந்தோஷமாகவும் வாழ அது வழி செய்யும் என்றே நான் கருதுகிறேன்," என்று குறிப்பிட்டார்.

கொத்தலாவலை கூற்று

நேருவின் மறுப்பு

இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகள், உலக விவகாரங்களில் நடுநிலைமையிலிருக்க வேண்டுமென்று தாம் கூறியதாகச் சொல்லப்படும் செய்தியை நேரு மக்கள் சபையில் மறுத்தார்.

"சில மாதங்களுக்கு முன்பு நான் சரித்திர ரீதியில் உலக நிலைமை பற்றி விமர்சனம் செய்கையில், ஐரோப்பிய ஆக்கிரமிப்பிலிருந்து அமெரிக்கா தன்னை விடுவித்துக் கொள்ள மன்ரோ [illegible] கொள்கையை [illegible]த்திக் கொண்டதுபோல, ஆசிய நாடுகளிலும் வெளிநாட்டவர் தலையிடக் கூடாது—அந்தந்த நாடுகளின் மேதைக்கேற்ப, அவை வளர விட வேண்டுமென்று மட்டும் கூறினேன்," என்றார்

"இந்தியாவிற்கு நிக்கோனமையில் தளம் வேண்டும்; இந்தியா, பர்மா, இலங்கை ஆகியவை 'மன்ரோ' கொள்கையைப் பின்பற்ற வேண்டும்." என்று சர்தார் கே. எம். பணிக்கர் குறிப்பிட்டதாகக் கொத்தலாவலை பேசியதாக வெளிவந்துள்ள செய்தி பற்றிக் கேட்கப்பட்டபோது, நேரு பதிலளித்ததாவது:—

"இந்தியாவின் கொள்கை பற்றி வெளிவந்துள்ள செய்திகள் தவறானவை; அவை, தப்பபிப்பிராயத்தினால் கூறப்பட்டவை; இந்திய சர்க்காருக்குத் தெரிந்தவரையில் நிக்கோனமை, இந்தியாவின் தளமாக இருக்கவேண்டுமென யாரும் கூறியதில்லை; அவ்வாறு கூறுவது இந்தியாவின் கொள்கைக்கு முற்றிலும் வேறுபட்டது, சர்தார் பணிக்கர் தம் சொந்த அபிப்பிராயத்தோடு அதைக் கூறியிருக்கலாம்; ஆனால் அக்கருத்துக்கள் மத்திய சர்க்காருடையவோ, அல்லது பிரதமருடையவோ கருத்துக்களைப் பிரதிபலிக்கும் என்று நினைப்பது தவறு" என்றார்.

தவறு செய்தனர்! தண்டிக்கப்பட்டனர்!

கல்கத்தா கம்பெனியொன்றின் மானேஜரும், சொந்தக்காரரும் ஜபல்பூரிலுள்ள பீரங்கித் தொழிற்சாலைக்கு வெடிமோம் சப்ளை செய்வதாக ஒப்புக்கொண்டு உண்மையில் வெடிமோம் சப்ளை செய்யாமலேயே, போலி பட்டியல்களைச் சமர்ப்பித்தும், போலி ரயில்வே ரசீதுகளைக் காட்டியும் சர்க்காரிடமிருந்து சுமார் 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வரை வாங்கிக்கொண்ட குற்றத்துக்காக தலா ஆறு மாதக் கடுங்காவலும், 1000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டனர்

வெளிநாட்டு நாணயச் செலாவணி வர்த்தகத்தில் சட்டவிரோதமாக ஈடுபட்டு வந்ததாக தந்தை, மகன் இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டு தகப்பனுக்கு 600 ரூபாய் அபராதமும், மகனுக்கு 200 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

ரிசர்வ் பாங்கியின் அனுமதியின்றி இந்தியாவுக்கு வெளியே பணம் அனுப்பியதாக, பம்பாய் கம்பெனியொன்றைச் சேர்ந்த இரண்டு கூட்டாளிகள், மூன்று வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு தலா மூன்று மாதக் கடுங்காவலும், மொத்தம் 11,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டனர்.

கோயமுத்தூரைச் சேர்ந்த வருமான வரி அதிகாரி ஒருவர், ஒருவரிடமிருந்து 800 ரூபாய் லஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

பூரியைச் சேர்ந்த ரயில்வே ஜமாந்தார் ஒருவர், ரயில்வே கண்ட்ராக்டர் ஒருவருக்கு உத்தியோகத்தில் சலுகை காட்டுவதற்காக அவரிடமிருந்து லஞ்சம் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு 3 மாதக் கடுங்காவல் தண்டனையும், 100 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார்.

அரக்கிழக்கு நாடுகளிலிருந்து சுமார் 8,22,000 ரூபாய் பெறுமானமுள்ள 560 தங்கக் கட்டிகளைக் கள்ளத்தனமாகக் கல்கத்தாவுக்குக் கடத்தியதற்காக, அந்நியர் ஒருவருக்கு 1000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது; கல்கத்தா சுங்க அதிகாரிகள் அந்தத் தங்கத்தைப் பறிமுதல் செய்ததுடன், அவரிடமிருந்து இரண்டு லட்ச ரூபாய் அபராதமும் வசூலித்தனர்.

கிழக்குப் பஞ்சாபைச் சேர்ந்த ஜகதரி என்ற இடத்தில் உள்ள ஒரு கம்பெனியின் முதலாளி ஒருவர், தாம் உண்மையில் அனுப்பாத சரக்குகளுக்குப் போலிப் பட்டியல்கள் தயாரித்து, சரக்குகளை அனுப்பியதாகப் போலி ரயில்வே ரசீதுகளைக் காட்டிப் பணம் பெற்று, இந்திய சர்க்காரை மோசடி செய்ததாக, எட்டு வழக்குகளில் குற்றஞ் சாட்டப்பட்டு, ஆறு மாதத்திலிருந்து இரண்டு ஆண்டு வரை பலவகைக் கடுங்காவல் தண்டனைகளும், மொத்தம் 9,400 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார் அவர் வேறொரு வழக்கில் 25,000 ரூபாய் ஜாமீன் தொகைக்காக பொய்க் கையெழுத்திட்ட பாங்கி உறுதிமொழிப் பத்திரமொன்றைக் காட்டி, அதன் மூலம் கிர்க்கியிலுள்ள வெடிமருந்து தொழிற்சாலைக்கு 30,000 வெடி மருந்துப் பெட்டிகள் சப்ளை செய்வதற்காகச் சில ஆர்டர்களைப் பெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். அந்த வழக்கிலும் அவருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனையும, 700 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

வர்த்தக—தொழிலியல் டைரெக்டர் ஜெனரலிடமிருந்து தாம் பெற்ற இரும்பு-உருக்குக் கோட்டாவை துஷ்பிரயோகம் செய்ததற்காக, அமிருதசரஸில் உள்ள கம்பெனி ஒன்றின் நிர்வாக டைரெக்டருக்கு ஒராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த அவரது உறவினர் ஒருவருக்கும் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

சீனாவில் மீண்டும் ஆங்கில மொழிக்கு மதிப்பு!

சீனாவில், கடந்த நான்கு ஆண்டு காலமாய் புறக்கணிக்கப்பட்டிருந்த ஆங்கில மொழி, இன்று, தனது பழைய நிலையை திரும்பவும் பெற்றுக் கொண்டு வருகிறது.

அயல் நாட்டு மொழிகளில், ரஷிய மொழிக்கே முதலிடம் அங்கு கிடைத்து வருகிறதென்றாலும் அதற்கடுத்த பிரபல்யமான அயல் மொழியாக ஆங்கிலம் இடம் பெறுகிறது.

அயல் நாட்டு மொழிகளுக்கான சீன பல்கலைக் கழகத்தின் [illegible] கள் ரஷிய, ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மனிய மொழிகள் பயிலுவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். ரஷிய, ஆங்கில மொழிகள் பயிலுவதில் தான் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது—சகல மக்கள் ஜனநாயக நாடுகளுக்கும் ரஷிய மொழி இன்றியமையாததாகிவிடுகிறது. ஆங்கிலம், முதலாளித்துவ நாடுகளுடன் தொடர்புகொள்ள தேவையாக இருக்கிறது.

மேற்கத்திய நாடுகளுடன், தான் கொள்ள வேண்டிய தொடர்பு மிக நெருங்கியதாக இருப்பதால் ரஷிய மொழி மட்டுமே பயில்வதால் போதாதென்பதையும், ஆங்கில மொழியும் பயிலவேண்டியது அவசியம் என்பதையும் சீன அரசாங்கம் வெகுவாக உணர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

இவையன்றி, சீன மக்களுக்கு மங்கோலியா, கொரியா, ஜப்பான், வியட்நாம், இந்தோனேஷியா, சயாம், பர்மா, இந்தி, அராபி ஆகிய மொழிகளும் கற்றுத்தர பல்கலைக் கழகங்கள் வழி வகை செய்துள்ளனவாம்.

குடிசைத் தொழில்கள்

மாநில அரசுகளுக்கு திட்டக் கமிஷன் அறிவிப்பு

பெரிய தொழில்கள் [illegible] சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் இவற்றில், மாநில சர்க்கார்கள் தங்கள் வசதிபோல் நடந்து கொள்ளலாமென்றும், போக்குவரத்து அபிவிருத்தியிலும் அவை கவனம் செலுத்தலாமென்றும், இவ்வாறு செய்வதால் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு நேர்முக, மறைமுக ஆதரவுகள் கிடைக்கலாம் என்றும் திட்டக் கமிஷன், மாநில சர்க்கார்களுக்குத் தெரிவித்திருக்கிறது.

மேலும், பெரிய தொழில் திட்டங்களை, தொழில் அபிவிருத்தி கார்ப்பொரேஷன் மூலமாக, மத்திய அரசாங்கம் மேற்கொள்ளுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கிவந்த தொழில் ஸ்தாபனங்களை, மாநில சர்க்கார் திட்டங்களாகவே மேற்கொள்ள வேண்டும் என்று சமீபத்தில் சில மாநில சர்க்கார்கள் யோசனை கூறியிருப்பதாகவும் தெரிகிறது.

குற்றங்கள் குறைகின்றன!

பம்பாயில் கொலை, திருட்டு, 'பிக்-பாக்கட்' இவை எல்லாம் 1951-ம் ஆண்டு இருந்ததைக் காட்டிலும் வெகுவாகக் குறைந்திருப்பதாக பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய், சட்டசபையில் குறிப்பிட்டார்.

1951-ம் ஆண்டில் 28 ஆக இருந்த கொள்ளைச் சம்பவங்கள் 1953-ல் 11 ஆகக் குறைந்துள்ளன. இந்தக் கொள்ளைகளில் ஈடுபட்டிருந்த சொத்துக்களின் மதிப்பு 1951-ல், ரூ 12,43 977, 1953-ல் ரூ 8065 என்றும் 1951-ல் 13,453 திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றதற்கு, 1953-ல் 9419 சம்பவங்கள் மட்டுமே நடைபெற்றதாயும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் புள்ளி விவரம் கள் தருகையில் 1953ல் திருட்டுப் போன சொத்துக்களின் மதிப்பு ரூ .36,06,676 என்றும் ஆனால் 1953ல் திருட்டுப்போன சொத்துக்களின் மதிப்பு ரூ 74,47,124 என்றும் தெரிவித்தார்.

'பிக்-பாக்கட்' சம்பவங்களும் 1951ல் 743 ஆக இருந்தவை 1953ல் 479 ஆகக் குறைந்து விட்டதென்றும் குறிப்பிட்டார்.

கொலைக் குற்றம் சம்பந்தப்பட்ட வகையில் பம்பாய் மாநிலம் முழுவதும் 1947-ல் இருந்ததைவிட இப்போது சம்பவங்கள் அதிகமாயுள்ளன என்று அவர் கூறினார்.

1947லிருந்து [illegible]
ஜூலை மாதம் [illegible]
கொலைச் சம்[illegible]
செய்யப்பட்டு[illegible]
கொலைக் [illegible]
சென்னை[illegible]
5,330 [illegible]
7,884 [illegible]
என்று [illegible]
என்று [illegible]
தவி[illegible]

இராதா மீதுள்ள வழக்குகள்

சர்க்கார் வாபஸ் பெற்றுவிட்டது

சென்னை, செப். 17—

சென்னை சர்க்கார் தோழர் எம். ஆர். இராதா அவர்கள் மீது தடை செய்யப்பட்ட நாடகங்களை நடத்தியதாக சேலம் மாவட்ட மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல்செய்திருந்த வழக்குகளை வாபஸ் பெற்றுவிட்டனர் என்று தெரிகிறது.

தன் மீது தொடரப்பட்ட வழக்குகளை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தோழர் இராதா தாக்கல் செய்திருந்த மனு இன்று பிரதம நீதிபதி, பி. வீ. இராஜமன்னார், நீதிபதி ராஜகோபால அய்யங்கார் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, தோழர் இராதா மீதிருந்த வழக்குகளை வாபஸ்பெற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று அட்வகேட்—ஜெனரல் கூறினார்.

அதன் பேரில், தனது மனுவை வற்புறுத்தவில்லை என்று இராதா அவர்கள் தரப்பில் கூறப்பட்டது.

பிச்சைக்காரருக்கு வரி!

கராச்சி, செப். 15—

பிச்சைக்காரர்கள் மாதம் ஒன்றுக்கு இரண்டணா வரி தரவேண்டும் என்று பாகிஸ்தான் பஞ்சாபைச் சேர்ந்த ஜாங்வால் நகரசபை விதித்திருக்கிறது. பிச்சைக்காரர்கள் அந்த நகரை விட்டே வெளியேறிவிட்டனராம்! ஏறத்தாழ இப்போது அங்கு பிச்சைக்காரர்களை கண்ணில் படவில்லையாம்.

கிராம உதவித் திட்டத்திற்கும் பொருளீட்டும் வகையில் நகரசபை விதித்த அந்த பிச்சைக்காரருக்கு விதிக்கப்படும் வரி மூலமாக இதுவரை ரூ. 20 வசூலாகியுள்ளதென்றும் கூறப்படுகிறது,

அணு ஆயுதப் பரிசோதனை

ரஷ்யாவில் ஆறாவது முறையாகநடைபெற்றது

சோவியத் யூனியனின் சமீபத்தில் ஒரு அணு ஆயுதம் பரிசோதனை நடைபெற்றதாக 'டாஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

விஞ்ஞான ஆராய்ச்சி வேலைத் திட்டத்தின்படியே, பலவகையான அணு ஆயுதங்களில் ஒன்று பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாம்.

அணுகுண்டு வெடிப்பதினால் ஏற்படும் விளைவுகள் குறித்து விஞ்ஞானதொரு ஆராய்ச்சி நடத்தவே இந்தப் பரிசோதனை நடைபெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

அணு ஆயுதத் தாக்குதலின்றும் பாதுகாத்துக் கொள்வதெப்படி என்பதைக் கண்டறிவதற்கு சோவியத் விஞ்ஞானிகளுக்கு இந்த பரிசோதனை நல்ல பலன்களைத் தந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இந்தப் பரிசோதனை தனி அணு ஆயுதப் பரிசோதனையா, [illegible] நீர்வளிக் குண்டு [illegible]ப் பரிசோதனையா [illegible]ாக அறிவிக்கப் [illegible] ஆயு அணு [illegible] நடந்த [illegible]டமாக [illegible]

பாங்கி ஊழியர் பிரச்சினை!

மீண்டும் விசாரணையாம்!

நீதிபதி ஒருவர் நியமனம்!

புதுடில்லி, செப் 17—

பாங்கி ஊழியர்கள் பிரச்சினைகளை மீண்டும் ஆராய ஒரு புதிய விசாரணைக் குழுவை இந்திய அரசாங்கம் நியமித்துள்ளது. பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதியான ராஜாத்யக்ஷா மட்டும் தான் இந்தக் குழுவில் இருப்பார்! அப்பீல் டிரிபியூனல் தீர்ப்பை சர்க்கார் மாற்றியதினால் உருவாகியுள்ள நிலைமையை ஆராய்வது அதிகாரமாம்.

அப்பீல் டிரிபியூனலின் முடிவுகளை சர்க்கார் மாற்றியதினால் மத்திய அரசாங்க தொழிலாளர் மந்திரியாயிருந்த திரு. வி வி கிரி தனது பதவியையே ராஜிநாமாச் செய்தது நினைவிலிருக்கலாம்.

அந்தப் பிரச்னையை மீண்டும் ஆராய்வதற்காக என்று சொல்லி இந்தப் புதிய ஏற்பாட்டை இந்திய அரசாங்கத்தினர் செய்திருக்கின்றனர்.

இந்த விசாரணை முடிய இரண்டு மாத காலமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்க்காரால் மாற்றப்பட்ட வகையில் அப்பீல் ட்ரிப்யூனல் தீர்ப்பை அமுல் நடத்தலாமா, அல்லது அப்பீல் ட்ரிப்யூனல் தீர்ப்பை எந்தவித மாறுதலுமின்றி உள்ளவாறே அமுல் செய்வதா, அன்றி வேறு ஏதேனும் புது மாறுதல்களுடன் அப்பீல் ட்ரிபியூனலின் தீர்ப்பு அமுல் செய்யப்படலாமோ என்பது பற்றி விசாரணை செய்து அந்த நீதிபதி தீர்ப்புக் கூறுவார் என்றும் தெரிகிறது.

இந்தோனேஷியப் பிரதமர்

டில்லி வருவார்

இந்தோனேஷியாவின் பிரதம மந்திரி டாக்டர் அலி சஸ்த்ரோமிட் ஜோஜோ, இம்மாதம் 22-ந் தேதி டில்லிக்கு வர இருக்கிறார்.

ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் முதலானோரும், மறுநாள் பிரதம மந்திரி நேருவும் அவருக்கு விருந்தளிப்பார்கள். பார்லிமெண்டரி இலாகா மந்திரி சத்திய நாராயண சின்ஹா, மக்கள் சபையில் ஒரு விசேட கூட்டம் ஒன்றை ஏற்படுத்தி, இந்தோனேஷியப் பிரதமர், சில முக்கிய மத்திய சட்டசபை மெம்பர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறார் என்றும், அதன் பின்னர், டாக்டர் அலி ஆக்ராவுக்கும், தலைநகரைச் சுற்றியுள்ள பல நிறுவனங்களுக்கும் செல்வார் என்றும் தெரிய வருகிறது.

பம்பாயில் துப்பாக்கிப் பிரயோகம்!

பம்பாயின் மத்தியப் பகுதியில் நடைபெற்ற ஒரு கோஷ்டி சண்டையைத் தடுக்க போலீசார் மூன்று ரவுண்டு சுட்டனர் என்று தெரிகிறது.

துப்பாக்கிக் குண்டுகள் ஒருவரும், கோஷ்டிகளிடையே ஏற்பட்ட கைகலப்பினால் ஐவரும் பேர்களும் கொலைப்பட்டனர் என்று தெரிகிறது.

கள்ளச் சாராயம் விற்பதில் போட்டி மனம் கொண்ட அந்த இருகோஷ்டியினரும் பாபுரேட்போடில் சேர்ந்தத் தகராறுகளாகச் சண்டையிட்டுக் கொண்டனராம்.

கோவையில் கைதானோர்

விசாரதா, செப் 17—

கோவை பகுதியில் பிரவேசித்து சத்தியாக்கிரகம் செய்த 13 கோவை கைதிகளும், இடது வெட்டு எனும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது.

சென்னைக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 18, 19—9—54 சனி, ஞாயிறு இரண்டு நாட்களில் நடைபெறும் நெல்லை மாவட்ட தி. மு. கழக மாநாடுகளில் கலந்துகொள்வதன் பொருட்டு, பொதுச்செயலாளர் அவர்கள் 18. 19—9—54 சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் சென்னை செம்பியம், இராயபுரம் ஆகிய இடங்களில் சொற்பொழிவாற்ற இருந்த கூட்டங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

கழகக் கூட்டங்கள்

★

மேட்டூர்

போதஜன சேவா சங்க மைதானத்தில்

20—9—54 மாலை 6½ மணிக்கு

தலைவர்: அ. சுப்பிரமணியம்

பேசுவோர்:

என். வி. நடராசன்

க. கு. சின்னசாமி

அ. பாலு

★

போளூர்

பழைய பஸ் நிலையத்தில்

19—9—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கன்னையன்

பேசுவோர்:

சிற்றணி சுப்பிரமணியம்

போளூர் கே. சுப்பிரமணியம்

★

உ. நா. வீரசோழபுரம்

21—9—54 மாலை 5 மணிக்கு

தலைவர்: எம், தங்கராசு

பேசுவோர்:

என். வி. நடராசன்

பொ. தருமன்

க. இளநாகன்

சி. அரங்கநாதன்

ஆதிதிராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாடு

19—9—54 ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு மதுராந்தகம் தாலுக்கா ஆதிதிராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாடு, கூட்டேரோடு சித்தாமூரில் தோழர் ஏ இரத்தினம், எம். எல். ஏ. தலைமையில் நடைபெறும். பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

இலங்கை தி. மு. கழக பொதுக்குழு தேர்தல்

26—9—54 காலை 9½ மணிமுதல் மாலை 5½ மணி வரை கொழும்பு ஸ்லேவ் ஐலண்ட் ஸ்ரீ நாராயண குரு மண்டபத்தில், இலங்கை தி. மு. (தலைமை) கழக பொதுக்குழு தேர்தல் கூட்டம் தோழர்கள் சுந்திரன், ஏ. எம். துரைசாமி தலைமையில் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

19—9—54 ஞாயிறு காலை 10-30 மணிக்கு முத்தமிழ் மன்றக் சார்பில், சென்னை முத்தியாலுப்பேட்டை செ. 17; சாலை விநாயகர் கோவில் தெருவில், தோழர் மு மாணிக்கம் தலைமையில் 'நினைவு, நினைப்பும்' என்ற தலைப்பில் பல தோழர்கள் பேசுவார்கள்.

கண்ணதாசன் பேச்சு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடமையின் எல்லையில் நிற்கும் பகுதியில் பிறந்தவன்; நெற்றியில் ஒரு சாண் விபூதி இல்லாவிட்டாலும் நீசனாகக் கருதப்படும் இடத்தில் பிறந்தவன்; சிறிதிருந்தும் என்னுடலே சிறி எழுந்து, 'எடா! மதியிலி! சைவப் பெருங் குலத்தில் களங்கம் தாங்கவோ பிறந்தாய்!' எனக் கொதித்து விட்டைவிட்டுத் தூரத்தும் 'திருக்கூட்ட'த்தாரின் மத்தியில் வாழ்பவன்—'இன்று அஷ்டமி; புறம்படாதே! நாளைக் கார்த்திகை; கறி உண்ணாதே! வைகுந்தப் போகும்போது வலது காலை முன்னால் வைத்து நட! சாமி வருகிறார்; கும்பிட்டு விபூதி வாங்கிக்கொள்! பிள்ளையைத் தூக்கிவா! குன்றக்குடியாருக்கு மொட்டை அடிக்க வேண்டும்; இப்படி ஆயிரம் மடமைகள் வாய்ந்தோடும் பகுதியிலிருந்து அறிவியக்கத்திற்கு வந்த மிகச் சிலருள் ஒருவன், என்றே என்னைத் தலைமை தாங்கப் பணித்துள்ளனர்!

"எனக்குப் புரிகிறது; நான் ஆத்திகனாக இருந்தபோது, கோழையாக இருந்தேன்; ஆண்டவன் கவலை சுற்றலுக வாழும்போது துணிச்சல் காரனாக ஆகிவிட்டேன்; 'ஐயோ, என்னைத் தூற்றுகிறார்களே; ஆண்டவனே நீதான் கேட்கவேண்டும்.' என்று அஞ்சுவேன் அந்நாளில்—'தூற்றுகிறார்களா, யாரடா என்னைத் தூற்றியவன்; இப்படி என் எதிரே வா!' என்று கேட்பேன், இனியும்!

"இந்த மேடையிலே உறுதியாகக் கூறுகிறேன்—நான் ஆத்திகனாகப் பிறந்தேன்; சுயமரியாதைக்காரனாக வளர்கிறேன்! சுயமரியாதைக்காரனாகவே சாவேன்!

இன்றைய நிலை

இன்றைக்கு மந்தை போட்டு ஆயிரக்கணக்கான மக்களைக் கூட்டி, சீர்திருத்தத்தின் அவசியம் பற்றி சிறிதும் இடையூறின்றி மணிக்கணக்கில் பேசுகிறோம். மாலை வருகிறது; பெற்றுக்கொள்கிறோம். வாழ்த்தொலி முழங்குகிறது; மகிழ்கிறோம்!

ஆனால்......இதற்குப் பல்லவி எடுத்துக் கொடுத்தவர்கள் பட்டபாடு சொல்லுந்தரத்தன்று!

மாலை வரும்—ஆனால், மலர் இருக்காது—செருப்பு இருக்கும்!

முழங்குவார்கள்—'வாழ்க தலைவர்' என்றல்ல—'நாத்திகர்கள் ஒழிக' என்று!

கைதட்டுவார்கள் - ஒரு கையால், சுயமரியாதைக்காரன் முதுகில்!

அந்த வெள்ளத்தை, கழித்தோடிய பயங்கர காற்றை, எதிர் நீச்சலிட்டுக் கடக்கவேண்டிய காலம்—அந்தக் காலம்! அந்த நாளிலே..... பட்டுக்கோட்டை அழகிரி, காசை மணி, மாயவரம் நடராசன் முதலியோர், பெரியார் ராமசாமியோடும், பொதுச்செயலாளர் அண்ணாவோடும் தோளோடு தோள் நின்று உழைத்தார்கள்; மறைந்த அந்த மாவீரர்களை இந்த மாநாடு மறந்துவிடாது! அவரது பணியால் எழும்பிய அறிவு மாளிகையின் அடித் தளங்கள் அவர்கள்! வரலாற்றில் எழிய சீர்திருத்தச் செம்மல்கள்! அவர்கள் பட்ட துயராலும், செய்த பணியாலும்தான். ஆத்திகக் கூட்டத்தால் இந்த மாநாடு எரிக்கப்படாமல் இருக்கிறது!

மற்றக் கட்சிக்காரர்கள்—கம்யூனிஸ்டு நண்பர்கள் உட்பட—எல்லோரும், தாங்கள் அறிவை வளர்ப்பதாகத்தான் கூறிக்கொள்கிறார்கள்; ஆனால் அவர்களில் ஒருவராவது அறிவை வளர்க்கும் பணியில் தங்கள் ஆயுளைத் தேய்த்துக் கொண்டதில்லை.

'பொருளாதாரம் நாட்டைக் கெடுத்தது; முதலாளி சமுதாயத்தைக் கெடுத்தான்'—இதுதான் அவர்களது முதற் பெரும் பல்லவி!

எந்த முதலாளி? உண்மையைச்சொல்லவில்லை! முத்தையா செட்டியார், டாடா, பிர்லா, டால்மியா — இவர்கள்தான் கெடுத்தார்களாம்! உண்மையில் இவர்கள் அதில் பங்கு பற்றினார்கள்; ஆனால், எந்த அடிப்படை நாட்டைக் கெடுத்தது? ஆரிய மடமை! அது வீட்டை எரித்தது; இதில் அவர்கள் பிடுங்கியது ஆதாயம் என்று புகுந்தார்கள்! இதுதான்!—முதலில் எதை ஒழிக்கவேண்டும்? மடமையை! அதை ஒழித்தால்தான் இந்த வன்நெஞ்சர்களும் சேர்ந்து சரிந்து, ஒழிந்து போவார்கள்!

அல்ஜீரியாவில் நில நடுக்கம்!

மக்கள் நகரைவிட்டு பயணம்!

அல்ஜீரியாவில் உள்ள ஆர்லியன்ஸ் வில்லி நகரில் கடந்த ஒன்பது நாட்களுக்கு முன் ஏற்பட்ட கோரமான பூமி அதிர்ச்சிக்கும் பிறகு, அழிக்கப்பட்ட அந்த நகரத்தில் உயிர் தப்பி வாழும் மனிதர்கள் எல்லாரும் நகரத்தை விட்டுக் காலிசெய்ய ஆரம்பித்தனர். மீண்டும் தொடர்ந்து சில நடுக்கம் ஏற்பட்டதின் விளைவாகவே அவர்கள் வெளியேறுவதாகத் தெரிகிறது.

இதுவரை ஏற்பட்ட நில நடுக்கத்தினால் சேதமான அளவற்ற செல்வங்களுக்கும் அப்பால் சுமார் 1800 பேர்கள் உயிரிழந்திருக்கக்கூடும் என்றும் தெரிகிறது.

வீடின்றித் தவித்துக்கொண்டிருந்த அகதிகள் நிவாரணத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த நேரத்தில் மீண்டும் நில நடுக்கம் தோன்றி பல இடிந்துபோன கட்டிடங்களையும் மணல் மேடுகளாக ஆக்கிவிடவே, தங்கள் உயிருக்கு பயந்து எஞ்சியுள்ள தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் சாரை சாரையாக வெளியேற ஆரம்பித்தனர் என்றும் தெரிகிறது.

அவர்கள் 105 மைல் தொலைவில் உள்ள அல்ஜியர்ஸ் நகருக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்களாம்.

பிரெஞ்சுஅரசாங்கம் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்திற்காக 2,50,000 ஸ்டெர்லிங்குகள் உதவி அனுப்பி உள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் திரா கௌந்தி செட்டியார், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (தி. நகர், தியாகராஜநகர்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.